CC 212/2016

07.01.2025.

அசா.1,

பெயர்: தமிழரசன்

த/பெ. தம்புராஜ்

அ.சா.1 கு.ப.ம.எண். 5357/2022-ன் கீழ் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused Present.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடன் மணிகண்டன் என்பவர் வாகனத்தில் அமர்ந்துவந்தார். மற்றொரு வாகனத்தில் ரமேஷ்ம் சாகுல் அமீதும் வந்தனர். நாங்கள் அனைவரும் காலை 9 மணியளவில் ஒன்றாகத்தான் கிளம்பி வந்தோம். எங்கள் ஊரில் இருந்து பொள்ளாச்சி வர தோராயமாக 2 மணி நேரமாகும். நானும், சாகுல் அமீது மற்றும் பால்பாண்டி ஆகியோர் வாகனத்தை ஓட்டிவந்தோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்த சமயம் கந்த மஹால் திருமண மண்டபம் அருகே மூவரும் வந்துகொண்டிருந்தோம்.

சம்பவம் கந்த மஹாலைத் தாண்டி ஒரு வளைவின் அருகில் நடந்தது. மேற்படி வளைவில் தெற்கில் இருந்து வரும் வாகனங்கள் தெரியாது என்றால் சரிதான். வடக்கில் இருந்து செல்பவர்கள் கவனித்து வாகனத்தை இயக்கவேண்டும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வேகத் தடை இருந்தது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை. சத்தம் கேட்டுதான் வாகனத்தை நிறுத்திப் பார்த்தோம் என்றால் சரிதான். அச்சமயம் கூட்டமாக இருந்தது. கூட்டத்தை விலக்கிச் சென்று பார்க்கும்போது வாகன விபத்தில் காயம்பட்டது எனது நண்பர்கள் எனத் தெரிந்தது. உடனடியாக 108 க்கு அழைத்துத் தகவல் கூறினோம்.

பின்னர் பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றோம். பின்னர் நாங்கள் காவல்நிலையம் சென்று மாலை 6 மணியளவில் புகார் கொடுத்தோம். புகாரினை நான்தான் எழுதிக்கொடுத்தேன். பின்னர் விபத்தில் அடிபட்ட நண்பர்களின் வீட்டிற்குத் தகவல் கூறினோம். சம்பவ சமயத்தில் நாங்கள் யாரும் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் சம்பவத்தில் அடிபட்டவர்கள் என் நண்பர்கள் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் முதல் விசாரணையிலும் போலிசார் விசாரணையிலும் மேற்படி விபரங்களைத்தான் கூறினேன் என்றால் சரிதான்.

மறுவிசாரணை

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam, B.A.B.L.,)
Judicial Magistrate No. II,
Pollachi.